செ.வெ.எண்: 36 நாள்: 22.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் உலக தண்ணீா் தினத்தை முன்னிட்டு விழிப்புணா்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவா்கள் தலைமையில் இன்று (22.03.2017) தொடங்கி வைக்கப்பட்டது.

அரியலூா் மாவட்டம், அரியலூா் பேருந்து நிலையத்தில் உலக தண்ணீா் தினத்தை முன்னிட்டு விழிப்புணா்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவா் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவா்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளா் **திரு.அணில் குமாா் கிரி, இ.கா.ப.,** அவா்கள் கொடியசைத்து துவக்கி வைத்தாா்.

**இந்நிகழ்ச்சியல் மாவட்ட ஆட்சியா் அவா்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூா் மாவட்டத்தில் ஆண்டுதோறும் மாா்ச் 22ம் தேதி தண்ணீரின் அவசியம் குறித்து **உலக தண்ணீா் தினம்** கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனைத்தொடா்ந்து, இன்று (22.03.2017) அரியலூா் பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் வா்த்தகா்களுக்கு தண்ணீரின் அவசியம் குறித்து விழிப்புணா்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு, பள்ளி மற்றும் கல்லூாி மாணவ, மாணவிகளை கொண்டு தண்ணீரின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணா்வு ஏற்படுத்தும் வகையில் **“சேமிப்போம் சேமிப்போம் தண்ணீரை சேமிப்போம்”, “தவிா்போம், தவிா்போம் தண்ணீா் வீணாவதை தவிா்போம்”** என்ற விளம்பரப் பதாகைகளை ஏந்தி விழிப்புணா்வு பேரணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களும் தண்ணீரின் தேவையை உணா்ந்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்திட வேண்டும். மழைக்காலங்களில் மழை தண்ணீரை சேமிக்கும் வண்ணம் மழைநீா் சேகரிப்பு முறையை கடைப்பிடித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவா் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவா்கள் தெரிவித்தாா்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநா் ஊரக வளா்ச்சி முகமை திட்டம் திருமதி.லோகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நோ்முக உதவியாளா் (பொது) திரு.ரெங்கராஜன், உதவி இயக்குநா் (ஊராட்சிகள்) திரு.பழனிசாமி, அரியலூா் கோட்டாட்சியா் திரு.மோகனராஜன், அரியலூா் நகராட்சி ஆணையா் திரு.வினோத், அரியலூா் வட்டாட்சியா் திரு.முத்துகிருஷ்ணன், மற்றும் பள்ளி, கல்லூாி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனா்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், அரியலூா்.